பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 24 | வெள்ளிக்கிழமை | 10.11.2023 | அதிர்வு 101

## பல்கலை மாணவர் மீது நீர்த்தாரைப் பிரயோகம்

### 21 பேர் கைது

கொழும்பு – மருதானையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து 21 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

05

# கிரிக்கெட் அதிகாரிகளை நீக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றம்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

“ஊழல் மிக்க ஸ்ரீ லங்கா கிரிக்கட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்” எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியன ஒன்றிணைந்து முன்வைத்த பிரேரணை மீதான விவாதம் சபையில் நேற்றுக் காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

விவாதத்தின் முடிவில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று சபாநாயகர் அறிவித்தார்.

குறித்த பிரேரணை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

05

Sri Lanka Cricket



# ரணில் அரசு மிக விரைவில் கவிழ்ந்தே தீரும்

### சஜித் ஆரூடம்

“ஊழல், மோசடியாளர்களைப் பாதுகாத்து வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு கவிழ்ந்தே தீரும். அதற்கான நாள் வெகுதொலைவில் இல்லை.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

05

# கண்ணை மூடிக்கொண்டு தீர்மானம் எடுக்க முடியாது



## எவருக்கும் அநீதி ஏற்பட இடமளியோம் என்கிறார் மொட்டுவின் தலைவர் மஹிந்த

“இது மொட்டுக் கட்சியின் ஆட்சி. இந்த ஆட்சியில் எவருக்கும் அநீதி ஏற்பட இடமளிக்கமாட்டோம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

சமகால அரசியல் 05

# போதை மாத்திரைகளுடன் புத்தளத்தில் இருவர் கைது

ஸீன் ரஸ்மின், ந.லோகதயாளன்)

கற்பிட்டி – இரம தீவு பகுதியில் சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன எனச் சந்தேகிக்கப்படும் 5 இலட்சத்து 70 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

கற்பிட்டி – நுரைச்சோலை 05






நேற்று நாடாளுமன்றத்தில் கிரிக்கெட் விவகாரம் விவாதிக்கப்பட்ட போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒரு விடயத்தைத் தெரிவித்தார்.

“நான் கிரிக்கெட் விவகாரம் குறித்து அதிகம் பேசுகின்றேன், எனக்குக் கிரிக்கெட் விளையாட்டுத் தெரியுமா, நான் கிரிக்கெட் விளையாடி இருக்கின்றேனா என்றெல்லாம் சிலர் இங்கு கேள்வி எழுப்புகின்றனர். நான் றோயல் கல்லூரியில் கிரிக்கெட்

05

# மூடப்படும் நிலைமையில் 95 வைத்தியசாலைகள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்



நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் தட்டுப்பாடு காரணமாக 20 வைத்திய சாலைகள் மூடப்பட்டுள்ளன. அத்துடன், 95 வைத்தியசாலைகள் மூடப்படக்கூடிய கட்டத்தில் உள்ளன.

ஒரு வருட காலத்துக்குள் சுமார் 1,500 வைத்தியர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளமையே இதற்கான காரண மாகும் என்று அரச மருத்துவ அதிகா ரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது வைத்தியர் ஹரித அளுத்கே மேலும் தெரிவிக்கையில் –

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வைத்தியர்கள் சேவையிலிருந்து வில கும் நிலைமை தற்போது நாட்டில் காணப்படுகிறது. விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட சுமார் 1,500 வைத் தியர்கள் ஒரு வருடம் என்ற குறுகிய காலத்துக்குள் சேவையிலிருந்து விலகி யுள்ளனர்.

இது நாட்டிலுள்ள மொத்த வைத் தியர்களில் நூற்றுக்கு 5 சதவீதமாகும். 2022 இல் காணப்பட்ட மொத்த வைத் தியர்களில் 5 சதவீதமானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அடுத்து நாம் எதிர்கொள்ளவுள்ள அபாயம் யாதெனில் வைத்தியர்க ளுக்கான சகல தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள 5,000 பேர் நாட்டை விட்டு வெளியேறக் காத்திருக்கின்றனர்.

எனவே இவற்றைத் தடுப்பதற் கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். ஒட்டுமொத்த வைத்திய கட்ட மைப்பிலிருந்து 5,000 பேரை ஒரே சந் தர்ப்பத்தில் இழக்க நேரிட்டால் அது நூற்றுக்கு 25 சதவீத இழப்பாகும்.

ஒரே சந்தர்ப்பத்தில் வைத்திய கட்ட மைப்பில் 25 சதவீத மனித வலுவை இழக்க நேரிட்டால், அதனை இலகுவில் ஈடுசெய்யவோ, தாங்கிக்கொள்ளவோ முடியாது.

இந்த நிலைமைகளை அடிப்படை யாகக் கொண்டு அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் நாடளாவிய ரீதியில் மதிப்பீடு களை முன்னெடுத்துள்ளது. அதற்க மைய யுத்த காலத்தில் கூட இல்லாதவாறு வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. மயக்க மருந்து நிபுணர்கள் இன்மையால், அது தொடர்பான நிபுணத்துவமற்ற வைத்தியர்களே மயக்க மருந்துகளை வழங்கி, சத்திர சிகிச்சைகளை மேற் கொள்ளவேண்டிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வைத்தியர்கள் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் 20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம், நுவரெலியா மாவட்டங்க ளிலும் பெரும்பாலான வைத்தியசா லைகள் மூடப்பட்டுள்ளன. இவை தவிர, மேலும் 44 வைத்தியசாலைகளில் பட்டதாரி வைத்தியர்கள் இன்றி பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களால் மாத்திரம் சேவைகள் வழங்கப்படும் நிலைமை காணப்படுகிறது.

யுத்த காலத்தில் காணப்பட்டதை விட வும் மோசமான நிலைமைக்கு வைத் திய கட்டமைப்பு சென்றுகொண்டிருக் கிறது.

எனவே, ஆட்சியாளர்கள் இப்போதா வது முற்போக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும். அது மாத்திரமின்றி, ஏற்கனவே மூடப்பட்டுள்ள வைத்திய சாலைகளுக்கு மேலதிகமாக இனி வரும் காலங்களில் 95 வைத்தியசா லைகள் மூடப்படக்கூடிய கட்டத்தை அடைந்துள்ளன.

ஒன்று அல்லது இரண்டு வைத்தி யர்களுடன் இயங்கும் வைத்தியசாலை களே இந்த நிலைமையில் காணப்படு கின்றன. அவற்றிலுள்ள வைத்தியர் கள் வெளிநாடுகளுக்கு செல்லவோ அல்லது அருகிலுள்ள வைத்தியசா லைகளுக்கு இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ளவோ எதிர்பார்த்துள்ளனர்.

சேவை வழங்கிக்கொண்டிருக்கும் ஓரிரு வைத்தியர்களும் இவ்வாறு வெ யேறிவிட்டால் அந்த வைத்தியசாலை களை மூடுவதைத் தவிர மாற்று வழி யில்லை.

அத்தோடு 150 வைத்தியசாலைக ளில் எதிர்பார்க்கும் சேவைகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதாவது இதற்கு முன்னர் நாளொன்றில் 10 சத்திர சிகிச்சைகளேனும் மேற் கொள்ளப்பட்ட வைத்தியசாலைகளில், இன்று அந்த சேவைகளை வழங்க முடியாத நிலைமை காணப்படுகி றது.

இதே போன்று மேலும் 168 வைத் தியசாலைகள் இவ்வாறு சேவைகள் முடங்கக்கூடிய நிலைமையில் காணப்படுகின்றன. இந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முறையான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட விட்டால் நாம் அடுத்த கட்ட நடவடி கைகளுக்கு தயாராவோம் என எச்சரிக் கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

# நிலாவெளி இளைஞர் துப்பாக்கியுடன் கைது



திருகோணமலை – நிலாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ள னர் என நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை, அண்ணா புரம் பிரதேசத்தை சேர்ந்த 23 வயது இளைஞர் ஆவார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நிலாவெளி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."

தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING

KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better

CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# டயனா கமகே மீதான தாக்குதல் விவகாரம் விசாரணை நடவடிக்கைகள் நிறைவுற்றன!

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே முன்வைத்துள்ள தாக்குதல் குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் விசாரணைகளுக்கு அமைய அதன் பரிந்துரைகள் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹன பண்டார மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோருக்கு இடையில் கடந்த ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நாடாளுமன்றில் மோதல் சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அணியில் விளையாடியிருக்கிறேன். பின்னாளில் மில் கில் ஸ்கூலில் (லண்டன்) படிக்கும் போது அந்தப் பாடசாலை அணியிலும் முக்கிய பொறுப்பில் விளையாடி இருக்கிறேன். அவற்றுக்கு ஆதாரமாக அந்த அணிகளின் படங்களைச் சமர்ப்பிக்கிறேன்" – என்று தெரிவித்து, தாம் இடம் பெற்ற நான்கு, ஐந்து பாடசாலை அணிகளின் படங்களையும் சபைப் பதிவேட்டுக்குக் கையளித்தார் சஜித்.

பாடசாலை நாள்களில் தான் கிரிக்கெட் வீரர் என்பதைப் படங்களைக் காட்டி நிரூபிக்க வேண்டிய கட்டாயம் சஜித்துக்கு.

பாவம் அவர்...!

\+ + +

நேற்று இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பிய்த்து, உதறப்பட்டது.

அப்படி விடயங்களை அம்பலப்படுத்தியமைக்காக தமக்கு இலக்கம் குறிப்பிடப்படாத ஒரு தொலைபேசி அழைப்பிலிருந்து கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"இந்த சலசலப்புகள், அச்சுறுத்தல்களுக்கு அஞ்சுபவன் அல்லன் நான். என் தந்தையாரும் கூட பெருவீதியில் வைத்துத்தான் கொல்லப்பட்டார். இவற்றுக்கெல்லாம் நாம் அஞ்சோம்!" – என்று மிதப்புடன் தெரிவித்திருக்கிறார் பிரேமதாஸா.

\+ + +

ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெலிமடையில் ஒரு பிரபல பாடசாலையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அந்தப் பாடசாலையில் பணி நேரத்தில் சங்கீத அறையில் புகை பிடித்துக் கொண்டிருந்த இரு ஆசிரியர்களை அநாமேதயா தகவலின் பெயரில் பொலிஸார் அதிரடியாகப் புகுந்து கைது செய்திருக்கிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்று கேட்கின்றீர்களா?

இரு ஆசிரியர்களும் கடமை நேரத்தில் புகைத்துக் கொண்டிருந்தது கஞ்சாவாம். அவர்களிடமிருந்து 1.9 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இருவரும் நேற்று வெலிமடை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட விருந்தினர்.

வேலியே பயிரை மேய்ந்த கதைதான் இது....!

## பல்கலை மாணவர் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருதானை ரயில் நிலையத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைக்கப் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் செய்தனர். அதன்பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக் கழக மாணவர்களில் 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சு நோக்கி மருத்துவ பீட மாணவர்களால் எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கட்டடத்தை உடனடியாகத் திறக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

## கிரிக்கெட் அதிகாரிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது ஆளும் கட்சியால் ஆமோதிக்கப்பட்டது. ஆளும் கட்சி சார்பாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அதை ஆமோதித்தார்.

எவ்வாறாயினும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரேரணை நிறைவேற்றும் வேளையில் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

## போதை மாத்திரைகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 39 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையின் சிறிய கப்பல் பிரிவினர், கற்பிட்டி – இரமதீவு பகுதியில் நேற்று மாலை விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த தீவுப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திரப் படகு ஒன்றைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்றும், சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

குறித்த இயந்திரப் படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 பெட்டிகளில் போதை மாத்திரைகள் காணப்பட்டன என்றும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

கைதான சந்தேகநபர்கள் இருவரும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 5 இலட்சத்து 70 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காகப் புத்தளம் மாவட்ட போதை ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## கண்ணை மூடிக்கொண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போது இதனைக் கூறிய அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவற்றை தீர விசாரிக்க வேண்டும். அதன்பின்னர்தான் ஒரு முடிவுக்கு வர முடியும். அதைவிடுத்து கண்ணை மூடிக்கொண்டு தீர்மானங்களை எடுக்க முடியாது.

நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழும் நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களின் வயிற்றில் அடிக்கக்கூடாது.

கடந்த வருட ஆரம்பத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் என்பது உண்மை. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிரணியினர் அன்று குளிர்காய முற்பட்டனர். ஆனால், அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போய் விட்டது. அரசின் உயர் பதவிகளில் மாற்றம் ஏற்பட்டாலும் மொட்டுக் கட்சியின் ஆட்சி தொடர்கின்றது. நாட்டின் பொருளாதாரம் தற்போது வழமைக்குத் திரும்பி வருகின்றது." – என்றார்.

## ரணில் அரசு...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆளும் தரப்பில் இருந்துகொண்டு மக்கள் நலன் கருதிச் சிந்திப்பவர்கள் தாமதிக்காமல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்க வேண்டும்.

இன்று அரசியலிலும் ஊழல், மோசடி. விளையாட்டிலும் ஊழல், மோசடி. அரசின் நாளாந்த நடவடிக்கைகளிலும் ஊழல், மோசடி. இவை அனைத்துக்கும் முடிவுகட்ட ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி வெகுவிரைவில் ஆட்சிப்பீடம் ஏறும்." – என்றார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலுக்கு நல்ல பாடம்

பிறிதொரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தயவில் தனது அரசைக் கொண்டு நடத்துவதில் உள்ள சிக்கல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது பட்டுணர்ந்து, தெளிந்திருப்பார் என்று நம்பலாம்.

தாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தாலும், தமக்குரிய எல்லைகள், மட்டுப்படுத்தல்கள் எது வரை என்பதை இப்போது அனுபவ ரீதியாக அவர் உணர்ந்திருப்பார்.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவன விவகாரத்தில் தமது வழிகாட்டலை மீறி நடந்த விளையாட்டு துறை அமைச்சரை -

தமக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கருத்துரைத்து சவால் விட்ட ஓர் அமைச்சரை -

சகித்துக் கொண்டு, அவர் அமைச்சராகத் தொடர்வதற்கு இடம் அளித்துக் கொண்டிழுக்க வேண்டிய இக்கட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவுக்கு.

இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்தைக் கலைத்து விட்டு, இடைக்கால சபை ஒன்றை நியமித்தார் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

தனது அனுமதி இல்லாமல் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை அது என்று சீறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அப்படி இடைக்கால நிர்வாக சபை அறிவித்த திட்டத்தை உடனடியாக விலக்க வேண்டும் என்றும், இல்லையேல் விளையாட்டுத்துறை அமைச்சு விடயத்தை தாம் தமது கைக்கு எடுத்து விடுவார் என்றும், தன்னைக் கூப்பிட்டு அச்சுறுத்தினார் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஜனாதிபதியின் அச்சுறுத்தலுக்குத் தான் அடிபணியப் போவதில்லை என்றும், இந்த விவகாரம் விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற ரீதியில் தன்னுடைய அதிகாரத்துக்குட்பட்டது என்பதால் இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை என்றும், அவர் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக அறிவித்தார்.

அது மட்டுமல்ல, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மேற்கொண்ட நடவடிக்கைகளை ஏற்று அங்கீகரிப்பது போல, இலங்கை கிரிக்கெட் சபையின் தற்போதைய நிர்வாகத்தை அடியோடு விலக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாடாளுமன்றம் நேற்று முழு நாள் விவாதத்தின் பின்னர் ஏகமனதாக நிறைவேற்றி இருக்கின்றது.

ஜனாதிபதி ரணிலின் கருத்து நிலைப்பாட்டிற்கு முற்றிலும் மாறான முடிவை நாடாளுமன்றம் ஏகமனதாக முன்னெடுத்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

இந்தப் பின்புலத்தில் இனி விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவைப் பதவியிலிருந்து விலக்குவதோ, விளையாட்டு துறை அமைச்சின் விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாமே தமது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோ, நாடாளுமன்றத்தின் நேற்றைய ஏகமனதான முடிவை - அங்கீகாரத்தை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புறம் தள்ளுகின்றார் என்ற கருத்தியலையே தந்துவிடும்.

ஆகவே, இந்த மோதலின் முதல் சுற்றில், விளையாட்டுத்துறை அமைச்சரின் கைகள் ஓங்கி விட்டன என்ற உண்மையை ஒப்புக்கொண்டு, அமைதியாகப் போவதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இப்போதுள்ள ஒரே வழியாகும்.

## தேசியத் தீபாவளி விழா இம்முறை வவுனியாவில்

(அ.அஸ்வர்)



தேசிய தீபாவளி விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வளாகத்தில் மாலை 03.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தெரிவித்துள்ளார்.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் வவுனியா கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், மதகுருமார்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இத் தேசிய நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநிருத்தனன் அழைப்பு விடுத்துள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்.”

- ஹால் போரலாண்ட்
(அமெரிக்க இயற்கையியலாளர்)



# இணைய சூதாட்ட தடை சட்டம் செல்லும்: சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு



அதிர்ஷ்டம் அடிப்படையிலான இணைய சூதாட்ட விளையாட்டுக்களைத் தடை செய்த தமிழக அரசாங்கத்தின் அரசாணை செல்லுபடியாகும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் இணைய சூதாட்டத் திற்கு தடை விதித்து கடந்த மார்ச் மாதம் சட்டமன்றத்தில் சட்டமூலம் நிறை வேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்திற்கு ஆளுநர் ஆர். என்.ரவி, ஏப்ரல் மாதம் அங்கீகாரம் வழங்கியதை அடுத்து அதற்கு தடை விதித்து தமிழக அரசாங்கம் அரசாணை வெளியிட்டது.

இதை எதிர்த்து இணைய சூதாட்ட நிறுவனங்கள் சென்னை உயர் நீதி மன்றில் வழக்குகள் தாக்கல் செய்தன.

இந்த நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், திறமைக்கான இணைய விளையாட்டுக்களான ரம்மி, போக்கர் ஆகிய விளையாட்டுக்களை தடை செய்த பிரிவுகள் இரத்து செய்யப்படுகின்றன என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# டில்லியில் வளி மாசுபாடு தொடர்ந்தும் அதிகரிப்பு!



டில்லியில் வளி மாசுபாடு தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என தெரிவிக் கப்பட்டுள்ளது.

வளி மாசுபாட்டால் சுவாசக்கோளாறு உள்ளிட்ட பாதிப்புகளுக்கு உள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வளி மாசுபாட்டை கட்டுப் படுத்தும் வகையில் எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் செயற்கை மழையினை பொழியச்செய் வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு கின்றன.

அத்துடன், ஏனைய மாநிலங்களில் பொலித்தீன் பொருட்களை எரியூட்டும் செயற்பாட்டை நிறுத்துமாறும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, வளி மாசுபாடு குறித்து சுவாசக்கோளாறு உள்ளவர்கள், சிறு வர்கள் மற்றும் முதியவர்கள் அவதா னத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பாலஸ்தீன ஆதரவு நிலைக்காக இந்தியாவை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

மேற்கு ஜெருசலேத்தை தலைமை யிடமாகக் கொண்டு சுதந்திர நாடாக பாலஸ்தீனம் ஏற்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நவம்பர் 14 முதல் நவம்பர் 16 வரை தமிழகம் முழுவதும் பரப்புரை இயக்கமும், நவம்பர் 20 ஆம் திகதி சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று இடதுசாரி அமைப்புகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக மார்க்சிஸ் கொம்யூ னிஸ்ட், இந்திய கொம்யூனிஸ்ட் மற்றும் சி.பி.ஐ. கட்சிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கை,

மேற்கு ஜெருசலேத்தை தலைமை யிடமாக கொண்டு சுதந்திர நாடாக பாலஸ்தீனம் ஏற்கப்பட வேண்டும். இந்த கோரிக்கைகளை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என பொது மக்களிடம் நவம்பர் 14 முதல் நவம்பர் 16 வரை தமிழகம் முழுவதும் மாவட்ட, வட்டார அளவில் பரப்புரை இயக்கம் நடத்துவது என்றும், நவம்பர் 20 தலைநகர் சென்னையில் கட்சியின் மாநிலத் தலைவர்கள் பங்கேற்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வெளியுறவு கொள்கையைப் பாதுகாக்க நீடித்த சமாதானம் நிலவ வேண்டும் என்ற கொள்கையை வலியு றுத்தி நடைபெறும் பரப்புரை இயக்கம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இடதுசாரி கட்சிகள் அழைக் கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவில் இருந்து 150 இற்கும் மேற்பட்ட பிரித்தானிய பிரஜைகள் வெளியேற்றம்!

காசாவில் இருந்து 150 இற்கும் மேற்பட்ட பிரித்தானிய பிரஜைகள் வெளியேறியுள்ளனர்.

அவர்கள் ரஃபா வழியாக எகிப்தை சென்றடைந்துள்ளனர் என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் சிக்கியுள்ள வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதில், இஸ்ரேல் மற்றும் எகிப்துடன் இணைந்து பிரித்தானியா தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

அத்துடன், கனடா, ஜேர்மனி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் 600 பிரஜைகளும் வெளியேறியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசாவுக்கும், எகிப்துக்கும் இடையேயான ராஃபா எல்லை, கடந்த வாரம் முதல் பல தடவைகள் திறக்கப்பட்டு, பெரும்பாலான பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஹமாஸின் முகாமை கைப்பற்றியது இஸ்ரேல்!



10 மணிநேரப் போருக்குப் பின்னர் வடக்கு காசாவில் உள்ள ஹமாஸின் முகாமை கைப்பற்றியுள்ளது என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

நேற்றிரவு முழுவதும் அங்கு வான்வழித்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஹமாஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு காசாவில் இருந்து தெற்கு நோக்கி மக்கள் வெளியேறுவதற்கு அனுமதிக்கும் பாதை ஒன்று ஐந்தாவது நாளாகவும் திறக்கப்பட்டுள்ளது.

காசா நகரப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் சுமார் 50 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் வெளியேறியுள்ளனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

எனினும்,காயமடைந்த பாலஸ்தீனியர்களை வெளிநாட்டு கடவுச் சீட்டு வைத்திருப்பவர்களுடன் வெளியேற்றுவதற்கு ஹமாஸ் தரப்பினர் விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக எகிப்திற்குள் நுழையும் ரஃபா எல்லை மூடப்பட்டுள்ளது என சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மனிதனைக் கொன்ற ரோபோ!

தென்கொரியாவில் தொழிற்சாலை ஒன்றில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி காய்கறிபெட்டிகளை பெல்டில் ஏற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ரோபோ ஒன்று, காய்கறி பெட்டிக்கு பதிலாக ஊழியர் ஒருவரை பெல்டில் ஏற்றி கொன்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தென்கொரியாவின் கியோங்சாங் மாகாணத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றிலேயே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த தொழிற்சாலையில் அறுவடை செய்யப்பட்ட மிளகுகளை தரம் பிரித்து ஏற்றுமதி செய்யும் பணிகளை ரோபோக்களே செய்து வருகிறது.

இவ்வாறு தரம் பிரித்த மிளகு பெட்டி களை பெல்டிற்கு ஏற்றும் பணி நிகழ்ந்து கொண்டிருக்கையில் அருகில் நின்ற ஊழியரையும் தூக்கி இந்த ரோபோ பெல்டில் வைத்து அமுத்தியுள்ளது.

இதன் போது அந்த ஊழியரின் முகம் மற்றும் மார்பு பகுதிகள் நசுங்கிய நிலையில் அந்த ஊழியர் அலறி சத்தமிட்ட நிலையில் அங்கு அருகிலிருந்த மற்றைய ஊழியர்கள் இவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த ஊழியர் தென்கொரியாவின் கியோங்சாங் மாகாணத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் என்று கூறப்படுகிறது.



# அடுத்த ஆண்டு இங்கு ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என அமெரிக்கத் தூதர் நம்பிக்கை

இலங்கையில் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனநாயக ஆட்சிக்கு சரியான நேரத்தில் தேர்தல்கள் நடப்பது முக்கியம். அதனால் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுமென நம்புகின்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல்களுக்காக அனைத்து மக்களுக்கு குரல் கொடுக்கின்றனர். வாக்குப்பெட்டியில் மக்களால் தங்கள் கருத்தைக் கூற முடியும். மற்றும் அவர்களின் தலைமையைத் தேர்ந்தெடுக்க முடியும்.

இலங்கையில் அடுத்த வருடமும் அதற்குப் பிறகும் தேர்தல்கள் முறையாக திட்டமிடப்பட்டிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலைக் காண நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம். இலங்கையின் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் கலாசாரம் தொடரும் என்பதை அமெரிக்கா உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறினார்.




# பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்கான வாகன இறக்குமதி அனுமதி இடைநிறுத்தம்

பொதுப்போக்குவரத்துச்சேவைகளுக்கான வாகன இறக்குமதி அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாசம் நிறைவடைந்துள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அனுமதி வழங்கப்பட்ட மாதத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இனி எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

வாகன இறக்குமதி தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகம் விசேட குழுவொன்றை நியமித்திருந்தது.

வாகனங்களின் தேவைகள், வீதிகளுக்கான இட வசதி, எரிபொருள் செலவு போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்படுவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.



# புத்தளம், கற்பிட்டி பகுதியிலிருந்து ஐந்நூறு படகுகள் கடல் அட்டைத் தொழிலுக்காக வடக்கில் அத்துமீறல்!

## கடற்றொழில் அமைச்சருக்குத் தெரியவில்லையா என்று கேள்வி

**- ந.லோகதயாளன் -**

யாழ்ப்பாணம், நவ.10

புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்தவர்கள் ஐந்நூறுக்கும் மேற்பட்ட படகுகளில் கடல் அட்டைத் தொழிலுக்காக வடக்கே வந்து தொழில் செய்துகொண்டிருக்கின்றனர். இது கடற்றொழில் அமைச்சருக்குத் தெரியவில்லையா என வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்னாள் தலைவரும் தற்போதைய உபதலைவருமான நா.வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்புகின்றார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

புதிய கடற்றொழில் சட்டத்தை கடற்றொழில் அமைச்சர் கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

இதன்போது, எமது பகுதியில் தென்னிலங்கை மீனவர்களால் அச்சுறுத்தப்பட்டு எமது மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் எமது மீனவர்கள் தினம் தினம் பாதிப்படைந்து வருவது தொடர்பிலும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் கேள்வியொன்றை எழுப்பிய போது அதற்கு பதிலளித்த அமைச்சர், தென்னிலங்கை மீனவர்களால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து தனக்குத் தெரியாது என்றும், அப்படி இடம்பெற்றால் அது தொடர்பாக அறியத்தாருங்கள் எனவும் கூறினார்.

பூணை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பதை போன்று அமைச்சரும் கண்ணை மூடிக்கொண்டே பால் குடிக்கிறார். அவர் பேசுவதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. “நான் சொல்லுவதைத்தான் செய்வேன். செய்வதைத் தான் சொல்லுவேன்“ என சொல்லும் அமைச்சர் தென்னிலங்கை மீனவர்களது விவகாரம் தொடர்பில் எதுவும் தெரியாது என கூறுவது வேடிக்கையாக உள்ளது.

குடாரப்பு, மாமுனை போன்ற இடங்களில் போய்ப் பார்த்தால் தெரியும். அங்கு புத்தளம், கற்பிட்டி, மன்னாரைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட படகுகளில் அட்டை தொழில் செய்து வருகின்றனர். இவ்வளவு பாரிய செயற்பாடு இடம்பெற்று வருகையில் அது தொடர்பில் எதுவுமே நடக்காதது போன்று அமைச்சர் பதிலளித்திருப்பது ஏமாற்று நாடகமே.

கடற்றொழில் அமைச்சரோ, கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளரோ அனுமதி கொடுக்காமல் தென்னிலங்கையில் இருந்து இங்கு வந்து அவர்களால் எவ்வாறு தொழிலில் ஈடுபட முடியும்..? தென்னலங்கை மீனவர்களுக்கு அனுமதியைக் கொடுத்து அனுப்பிவிட்டு, தங்களுக்கு எதுவும் தெரியாது என்பதாக கூறுவது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும்.

அத்துடன், புதிய சட்டம் தொடர்பில் மீனவ அமைப்புக்களுடன் கலந்துரையாடவில்லை. கலந்துரையாடாமலேயே இச் சட்டம் கொண்டுவரப்பட்டவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுட்டிக்காட்டிய போது, இது முற்றிலும் பொய் என மறுத்துரைத்த அமைச்சர், யாழ் மாவட்டத்தில் மூன்று முறை மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடியே நாடாளுமன்றத்திற்கு இதைக் கொண்டு வந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

அப்படி எதுவும் நடைபெறவில்லை. கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தான் இந்த கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் அமைச்சர் சார்பான கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட சுமார் 18 பேர் தான் கலந்து கொண்டார்கள். அதுவும் முற்றிலும் சிங்கள மொழியில்தான் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த புதிய சட்ட மாதிரி ஆவணத்தில் 70 ஆம் பக்கம் முதல் 85 ஆம் பக்கம் வரை வெற்றுத் தாள்களாகவே காணப்பட்டது. அது தொடர்பில் சிலர் ஆட்சேபனை தெரிவித்த போது திருத்தம் செய்யப்பட்ட பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியுடன் ஒன்றரை மாதத்திற்கு பின்னர் மீண்டும் ஒரு கலந்துரையாடல் மேற்கொள்வதாகக் கூறிச் சென்றிருந்தனர்.

அன்று போனவர்கள் போனதுதான். இன்றுவரை திரும்பி வரவில்லை. ஆனால் அமைச்சர் சொல்லுகின்றார் மூன்று முறை கடற்றொழில் சமூகம் சார்ந்த சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்துதான் முடிவெடுத்ததாக. இது அப்பட்டமான பொய். வேண்டுமென்றால் யாழ் மாவட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு சங்கத்திடமும் சென்று கேட்டுப்பார்த்தால் உண்மை தெரியவரும்.

அமைச்சர் டக்ளஸ் சொல்வதெல்லாம்பொய், பொய்யைத்தவிர வேறெதுவுமில்லை. - என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

# தபால் சேவைகள் தொடர்ந்தும் ஸ்தம்பிதம்



தபால் சேவை ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பினால் நேற்று இரண்டாவது நாளாகவும் தபால் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன.

மத்திய தபால் பரிமாற்றகத்தில் நேற்று எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. ஏனைய மாகாணங்களில் உள்ள தபாலகங்களிலும் இதே நிலைமை தொடர்ந்தது.

பணிப்பகிஷ்கரிப்பிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், வவுனியா தபாலக உத்தியோகத்தர்கள் நேற்று சேவைக்கு சமுகமளிக்கவில்லை என்பதுடன், தபால் நிலையமும் மூடப்பட்டிருந்தது.

திருகோணமலை - கிண்ணியா தபால் நிலையமும் மூடப்பட்டுள்ள நிலையில், தபால் சேவைகளை பெற்றுக் கொள்ள சென்ற மக்கள் திரும்பிச் செல்ல நேரிட்டது.

மட்டக்களப்பிலும் தபால் நிலையம் மூடப்பட்டுள்ளதால், பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நுவரெலியா, ஹட்டன், டிக்கோயா உள்ளிட்ட பல பகுதிகளில் தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்திய சுற்றுலா ஹோட்டல் வலையமைப்பான தாஜ் குழுமத்தின் வேலைத்திட்டத்திற்காக நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையங்களின் கட்டடங்களை விற்பனை செய்யும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தாம் முன்னெடுத்துள்ள 48 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பு நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்த நிலையில், அரசாங்கத்தினால் இதுவரை தமக்கான சாதகமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கையை கவனத்திற் கொள்ளாமல் அரச வளங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சித்தால், நாட்டின் அனைத்துத் துறையினரையும் ஒன்றிணைத்து ஜனாதிபதிக்கு எதிர்ப்பை தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்..

அரச வளங்களை விற்பனை செய்து கடனை செலுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பாராயின், அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையெனவும் தபால் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார குறிப்பிட்டார்.

# தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடக்கினர் இலங்கைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள்

இலங்கைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையின் போது தமது கடமைகள் தொடர்பான தரவுகளை அதிகாரிகள் வழங்க மாட்டார்கள் என்றும், கூட்டங்களில் கலந்துகொள்ள மாட்டார்கள் என்றும் இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.போப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் கொடுப்பனவை அதிகரிப்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பனம் பொருட்கள் ஏற்றுமதி மூலம் ரூ. 7 கோடி 80 லட்சம் வருமானம்

இந்த வருடம் ஒக்டோபர் மாதத்திற்குள் பனை பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏழு கோடி 80 லட்சம் ரூபா வருமானம் நாட்டிற்குக் கிடைத்துள்ளது.

சர்வதேச சந்தையில் பனை வெல்லம், தேன் உள்ளிட்ட உற்பத்திகளுக்கு அதிக கேள்வி நிலவுவதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பனை தொடர்பான உணவு கைத்தொழில் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்கள் உற்பத்திகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டங்களை தயாரிக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

## கூரிய ஆயுதத்தால் தாக்கி கடற்படை சிப்பாய் கொலை


திருகோணமலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கி கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த கடற்படை சிப்பாய், திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கடற்படை முகாமில் கடமையாற்றிய 04 சிப்பாய்கள், தாம் தங்கியிருந்த இடத்தில் மது அருந்திக் கொண்டிருந்த போது இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுவடைந்து மோதலாக மாறியுள்ளது.

மாத்தளை - கந்தேகெதர பகுதியை சேர்ந்த 34 வயதான ஒருவரே மோதலில் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை நடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் மாத்தளை - இம்புல்கொல்ல பகுதியை சேர்ந்த 42 வயதான கடற்படை சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.



# போகம்பறை சிறைச்சாலைக் கட்டடத்தை தலதா மாளிகைக்கு வழங்கப் பணிப்புரை

கண்டி – போகம்பறை சிறைச்சாலைக் கட்டடத்தை தலதா மாளிகைக்கு அல்லது முதலீட்டுத் திட்டத்திற்கு வழங்குவதை விரைவுபடுத்துமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த குழுவில் முன்வைத்த பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமை குறித்து அதிகாரிகள் மீது அமைச்சர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திருத்தியமைக்கப்பட்ட கண்டி போகம்பறை சிறைச்சாலைக் கட்டடத்திற்கு செலவான பணத்தைப் பெற்றுக் கொண்டு, அதனை தலதா மாளிகைக்கு வழங்குவதற்கு அல்லது வேறு முதலீட்டுத் திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரினால் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் தயாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் இந்த பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

# சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இன்று இணையவழி அறிவியல் கலந்துரையாடல்

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் துரைராசாவின் பிறந்த தினத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இணையவழியிலான அறிவியல் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இக்கருத்தாடலானது பாடசாலை மாணவர்களை அறிவியல் ரீதியாகச் சிந்திக்க, செயற்பட ஊக்குவிக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு, "துப்பறியும் சாம்புவும், செயற்கை நுண்ணறிவும்" எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் அதிதிப் பேச்சாளராக மொறட்டுவைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி உதயசங்கர் தயாசிவம் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் பேராசிரியர் அழகையா துரைராசா தொடர்பிலான முன்னுதாரணக் குறிப்பைப் பேராதனைப் பல்கலைக்கழக பேராசியர் கலாநிதி நவரட்ணராஜா மேற்கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் கலந்துகொள்வதற்கான சூம் செயலி இணைப்பு Zoom Meeting ID: 675 0395 0277 Passcode: 23@Sirakukal

இளம் தலைமுறையினருக்கு சிறந்த முன்னுதாரணங்களை எடுத்துக் காட்டும் வகையில் பேராசிரியர் துரைராசா அவர்களின் பிறந்த தினத்தில் இந்த செயற்பாடு சிறகுகள் அமையம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.







# கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு மும்முரம்!

கிழக்கில் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரியநீலாவணை, பாண்டிருப்பு, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பகுதிகளில் மண் அகழ்வு பரவலாக இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பகுதிகளில் இரவு வேளையில் ரோந்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே, தற்போது கடல் மணல் அகழ்வு சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் பொலிஸார், இராணுவம், கடற்படையினர் இணைந்து கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமை திணைக்களம் உத்தியோகத்தர்களுடன் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பினும், தற்போது அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையான கடற்கரையோரங்களில் சட்டவிரோத மணல் கடத்தல் செயற்பாடுகள் பாரியளவில் இடம்பெற்று வருகின்றன.

இதன் காரணமாக கடல் அரிப்பும் இடம்பெறுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# யாழ் இளைஞரும் யுவதியும் கட்டுநாயக்காவில் கைது!

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சித்த இருவரை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்த இருவரும் டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று வருகைத் தந்துள்ளனர்.

பயண அனுமதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பில் சந்கேகமடைந்த அதிகாரிகள் இருவரையும் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அவர்களின் கடவுச்சீட்டுகளைப் பரிசோதித்த அதிகாரிகள் பிரான்ஸ் மற்றும் ஜப்பானுக்கு செல்வதற்காக போலியான தகவல்களுடன்



இரண்டு போலி விசாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்துள்ளனர்.

கைதான இருவரும் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞர் மற்றும் 19 வயது யுவதி எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலையக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



# பண்டிகைக் காலத்தில் சீனிக்குத் தட்டுப்பாடு!

தீபாவளியைக் கொண்டாட மக்கள் தயாராகி வருகின்ற நிலையில், சந்தையில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டமை, நிர்ணய விலை அறிவிக்கப்பட்டமை போன்றவற்றினால் சந்தையில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் பல காரங்களை தயாரிப்பதற்கான மூலப்பொருள்களில் சீனியும் முக்கிய இடம் வகிக்கின்றது.

எனினும், நாட்டின் அநேகமான பகுதிகளில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதிக விலைக்கு அதனைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் சீனிக்கு 25 சதமாக இருந்த இறக்குமதி வரியை 50 ரூபாவாக அதிகரிக்க நிதியமைச்சு கடந்த முதலாம் திகதி நடவடிக்கை எடுத்தது.

இறக்குமதி செய்யப்படும் சீனியின் விலை அதிகரிப்பை தடுக்கும் வகையில், நிர்ணய விலை விதிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதற்கமைய, பொதி செய்யப்பட்ட வெள்ளை சீனி ஒரு கிலோகிராம் 295 ரூபாவாகவும், பொதி செய்யப்படாத வெள்ளை சீனி ஒரு கிலோகிராம் 275 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது

பொதி செய்யப்பட்ட சிவப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 350 ரூபாவாகவும், பொதி செய்யப்படாத சிவப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 330 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.11.2023




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதியுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதட்டம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவகள் ஏற்படும்.




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக கானபப்டும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். தோல் சம்பந்தமான பிரச்சினைகளும் தூக்கமின்மையும் காணப்படும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவைகளை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளிதாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள். புதிய முதலீட்டிற்கான முடிவுகளை எடுக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.11.2023




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.









# வடமாகாண சம்பியனானது மன்னார் AA சூப்பர் கிங்ஸ்!

- மன்னார் நிருபர் -

வடமாகாண 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மன்னார் AA சூப்பர் கிங்ஸ் அணி சம்பியனானது.

வட மாகாண 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கடினப்பந்து சுற்றுப் போட்டி, கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்றது.

இந்தத் தொடருக்கான வீரர்கள் ஏலம் மூலம் அணிகளுக்குத் தெரிவாகினர்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டி, லீக் முறையில் இடம்பெற்றது.

ஆறு அணிகள் பங்கேற்ற இத் தொடரில், புள்ளிப்பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த மன்னார் AA சுப்பர் கிங்ஸ் அணி மற்றும் கிளிநொச்சி Bulls அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

இறுதிப்போட்டி கடந்த 05ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி அணி, முதலில் துடுப்பெடுத்தாடி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைச் சேர்த்தது.




பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி, 17.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்து சம்பியனானது.

அந்த அணிக்கு சம்பியன் கிண்ணத்துடன், இரண்டு இலட்சம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களைச் சேர்த்த சட்டத்தரணி இளங்குமரன் தெரிவுசெய்யப்பட்டார்.

அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மன்னாரைச் சேர்ந்த பர்னாந்து அருள் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதையும், சுற்றுப் போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்த யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதையும் பெற்றார்.









# இலங்கை தோல்வி நியூஸிலாந்துக்கு அரையிறுதி வாய்ப்பு

இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம், நியூஸிலாந்து அணி அரையிறுதிக்குள் நுழைவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் இதுவரை நடந்து முடிந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற முக்கியமான லீக் ஆட்டத்தில் இலங்கை - நியூஸிலாந்து அணிகள் விளையாடின.

இதில் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதி வாய்ப்பில் நீடிக்க முடியும் என்ற இக்கட்டான சூழலில் நியூஸிலாந்து விளையாடியது.

இந்த ஆட்டத்தில் முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணி 46.4 ஓவர்களில் 171 ஓட்டங்களைச் சேர்த்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

குசல் பெரேரா அதிரடியாக ஆடி அரைச்சதம் (51) அடித்தார். கடைசிக் கட்டத்தில் போராடிய தீக்ஷன 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்து வீச்சில் போல்ட் 3 விக்கெட்டுகளையும், பெர்குசன், சான்ட்னர், ரவீந்திரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் 172 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நியூஸிலாந்து சிறப்பான ஆரம்பத்தைக்கண்டது.

தொடக்க வீரர்களாக டேவான் கான்வே, ரச்சின் ரவீந்திரா ஆகியோர் தொடக்க விக்கெட்டுக்கு 86 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், கான்வே (45) ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ரச்சின் ரவீந்திராவும் (42) ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய டேரில் மிட்செல் அதிரடியாக விளையாடி 43 ஓட்டங்கள் சேர்த்தார்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 23.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 172 ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் நியூஸிலாந்து அணி அரையிறுதி வாய்ப்பைக் கிட்டத்தட்ட உறுதிப்படுத்தியது.

## கஷ்டம்

இலங்கைக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றதன் மூலம், 5 வெற்றிகளுடன் 10 புள்ளிகள் பெற்று, +0.743 ஓட்ட சராசரியுடன் புள்ளிப்பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது.

இதனால் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறுவது மிகவும் கடினமாகும்.

பாகிஸ்தான் அணி 8 புள்ளிகள் பெற்று +0.036 ஓட்ட சராசரியுடன் புள்ளிப்பட்டியலில் 5ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் தனது கடைசி லீக் ஆட்டத்தில் இங்கிலாந்துடன் நாளை (10) மோதவுள்ளது.

பாகிஸ்தான் அரையிறுதிக்குத்தகுதி பெற வேண்டும் என்றால் இங்கிலாந்தை 273 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். அல்லது இங்கிலாந்து அணி கொடுக்கும் இலக்கை 2.3 ஓவர்களில் அடித்து வெற்றி பெற வேண்டும்.

அதேவேளை, இன்று ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோதவுள்ளன. ஆப்கானிஸ்தான் -0.338 ஓட்ட சராசரியுடன் இருப்பதால் அந்த அணி பெரியளவில் வெற்றி பெற்றால் கூட அரையிறுதிக்கு முன்னேறுவது மிகவும் கடினமாகும்.

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 8 | 8 | 0 | 0 | 0 | 16 | 2.456 |
| 02 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 1.376 |
| 03 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 0.861 |
| 04 | நியூஸிலாந்து | 9 | 5 | 4 | 0 | 0 | 10 | 0.743 |
| 05 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.036 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.338 |
| 07 | இங்கிலாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -0.885 |
| 08 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.142 |
| 09 | இலங்கை | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.419 |
| 10 | நெதர்லாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.638 |